இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 175 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 22 – திங்கள்கிழமை 05 பிப்ரவரி 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 175 : Thiruvalluvar Year - 2055 - Thai 22 - Monday 05 February 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00






திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாளையொட்டி, ஸ்பெயின் நாட்டில் அவரது திருவுருவப் படத்திற்கு நேற்று முன்தினம் (03.02.2024), மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் ஆர்.உமாநாத் ஐ.ஏ.எஸ். ஆகியோர் உள்ளனர்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பினை ஏற்று அலைகடலெனத் திரண்டனர்!

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, பிப்.4-**

**பேரறிஞர் பெருந்தகை – ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் – அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் இந்நாளில், கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெற்றது.**

**கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் – பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக் கணக்கில் பங்கேற்றனர்.**

**அண்ணா நினைவிடத்தில் பேரணி நிறைவுற்றது. அங்கு அரசின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் தூவி வணங்கினார்கள்.**



பேரறிஞர் பெருந்தகை – ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் – அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் நேற்று முன்தினம் கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் – பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக்கணக்கில் பங்கேற்றனர். அண்ணா நினைவிடத்தில் பேரணி நிறைவுற்றது. அங்கு அரசின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் தூவி வணங்கினார்கள்.

அதன் விவரம் வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் – உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் – தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் – ‘கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு’ எனும் மகத்தான தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் – “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும் படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் – “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் – சுயமரியாதைச் சுடரொளி – சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் – எழுத்து வேந்தர் – தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர்-பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் நேற்று!

இந்நாளையொட்டி – கழகத்தின் சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி, நேற்று முன்தினம் காலை 8.00 மணி அளவில் திருவல்லிக் கேணி – வாலாஜா சாலையில் உள்ள ‘அரசு விருந்தினர் மாளிகை’ அருகில் தொடங்கி, அண்ணா நினைவிடத்தில் நிறைவுற்றது.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு முன்னிலை!

கழகத்தின் இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகித்தார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை வகித்தார்.

இம்மாபெரும் அமைதிப் பேரணியில் – தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, மாதவரம் எஸ்.சுதர் சனம், நே.சிற்றரசு, த.இளைய அருணா, மயிலை த.வேலு மற்றும் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இந்நாள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற இந்நாள் – முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அனைத்து கழக நிர்வாகிகளும், செயல் வீரர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு போற்றி ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டார்கள்.

## 100 செ.மீ. வரை பேய் மழை பெய்தும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதி வழங்கவில்லை!

# குடியரசுத் தலைவர் - தவறிழைக்கும் ஆளுநர்களைக் கண்டிக்க வேண்டும்!

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உரை!

புதுடெல்லி, பிப்.5-

**தமிழ்நாட்டில் 100 செ.மீ. வரை மழை பெய்தும் - வெள்ள நிவாரண நிதியாக ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு வழங்கவில்லை என்றும், ஆணவத்துடன் நடந்துகொண்டு தவறிழைக்கும் ஆளுநர்களை குடியரசுத் தலைவர் கண்டிக்க வேண்டும் என்றும் மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

குடியரசு தலைவர் திருமதி.திரெளபதி முர்மு அவர்கள் கடந்த 31.1.2024 அன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் பேசியதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி. 2.2.2024 அன்று ஆற்றிய உரை வருமாறு:-

குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த தீர்மானத்தில் எங்கள் கட்சி சார்பாகவும் எங்கள் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் சார்பாகவும் இந்த அவையின் வாதங்களில் கலந்துகொண்டு உரையாற்றுவதை பெருமையாக கருகிறேன்.

### பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் எந்தப் பயனும் இல்லை

சென்ற பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியின் குற்றம் குறைகளைப் பற்றியும் பள்ளி இறுதி ஆண்டில் படித்து தேர்வு பெற்று மருத்துவர் ஆகலாம் என்ற கனவோடு “நீட்” தேர்வு எழுதி தோல்வியுண்ட மாணவர்கள் ஆண்டுதோறும் நுற்றுக்கணக்கனோர் உயிர் பலி செய்து கொண்டிடுப்பதை பற்றி கவலைப்படாதஒன்றிய அரசு பற்றியும் தமிழகத்துக்கு பயன் நல்காத செயல்பாடுகள் பற்றியும் பணிகள் துவங்காத மதுரை எய்ம்ஸ் திட்டம் பற்றியும் ஏழை எளியோர், மகளிர், குழந்தைகள், முத்த குடிமக்கள், நடுத்தர மக்கள் என்று யாருக்கும் பயன்படாத மத்திய அரசாக பாஜக அரசு இருந்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### வெள்ள நிவாரண நிதியாக ஒரு ரூபாய் கூட வழங்கப்படவில்லை

சென்ற ஆண்டு 2023 டிசம்பர் முதல் வாரத்திலும் மூன்றாம் வாரத்திலும் பெய்த வரலாறு காணாத பெரும் மழையால் சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட 9 மாவட்டங்கள் வெள்ள நீரில் மூழ்கி கடும் பாதிப்புக்கும் பொருட்சேதத்துக்கும் ஆளாயின. இரண்டு கோடி மக்கள் பலநாட்கள் உணவு குடிநீர் மின்சாரம் இன்றி தவிக்க நேர்ந்தது. சென்னையில் 50 சென்டிமீட்டர் அளவுக்கும் தூத்துக்குடி பகுதியில் 100 சென்டிமீட்டர் அளவுக்கும் அதிகமான பேய் மழை ஒரே நாளில் கொட்டித் தீர்த்தத்தால் மக்களுக்கு தேவையான உணவு உடை உள்ளிட்ட உதவிகள் படகுகள் மூலம் வழங்கப்பட்டது. வெள்ள பாதிப்பு இரண்டு மாதங்கள் கடந்த பிறகும் இன்றளவும் தீர வில்லை. எண்ணற்ற கார்கள், இருசக்கர வாகனங்கள் பழுதுபார்க்க காத்திருக்கும் அவலம் நிலவுகிறது.

### பிரதமர், உள்துறை அமைச்சரை நேரில் சந்தித்து வேண்டுகோள்

டிசம்பர் 4 அன்று நான் பிரதமர் மோடி அவர்களை நேரில் சந்தித்து வெள்ள சேதம் குறித்து விளக்கிக் கூறியதுடன் முதல்வர் தளபதி அவர்கள் பிரதமருக்கு நிவாரண உதவி கோரி எழுதிய கடிதத்தை அளித்தேன். அதன்பிறகு, 19.12.2023; அன்று முதலமைச்சர் தளபதி அவர்கள் டெல்லி சென்று பிரதமர் மோடியை சந்தித்து 37,000 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தி கடிதம் அளித்தார். அப்போது நானும் சென்றிருந்தேன். பிரதமர் மோடி அவர்கள் மிகுந்த அக்கறையுடன் வெள்ள பாதிப்பு விவரங்களைக் கேட்டறிந்ததுடன் மாநிலத்துக்கு தேவையான உதவிகளை செய்ய தான் தயாராக இருப்பதாக உறுதி அளித்தார்.

இதற்கிடையில், டிசம்பர் 2023 முதல் வாரத்தில் ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் எனது இனிய நண்பர் ராஜ்நாத் சிங் அவர்கள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான சென்னைப் பகுதிகளையும், மூன்றாம் வாரத்தில் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்கள் தூத்துக்குடி நெல்லை மாவட்டப் பகுதிகளையும் நேரில் ஆய்வு செய்தனர். மூன்று மத்திய குழுக்களும் தமிழ்நாடு வந்து வெள்ளப் பகுதிகளில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செய்து முடித்த பாராட்டுக்குரிய நிவாரணப் பணிகள், மற்றும் பாதிப்பு, சேதம் மற்றும் மேற்கொள்ளப் படவேண்டிய புணரமைப்புப் பணிகள் பற்றிய விரிவான அறிக்கைகளை ஒன்றிய உள்துறைக்கு சமர்ப்பித்தது.

ஆயினும், ஒன்றிய அரசின் நிதி உதவி விடுவிக்கப்படாத நிலையில் அனைத்து கட்சி எம்.பி.க்கள் குழு எனது தலைமையில் டெல்லி சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை ஜனவரி 13 அன்று நேரில் சந்தித்து, தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்ட வண்ணம் இந்த வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து நிதி உதவி ரூபாய் 37,000 கோடியை முழுமையாக உடனே விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. அமைச்சர் அமித்ஷா அவர்களும் நிச்சயமாக ஜனவரி 27 தேதிக்குள் நிவாரண நிதி வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

இருப்பினும் 2.2.2024 வரை ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு நிவாரண நிதி உதவி தரவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அதுமட்டுமல்ல, இப்படி தமிழ்நாட்டுக்கு எதிராக மத்திய அரசு மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் செயல்படுவது கண்டனத்துக்கு உரியது என்பதை சுட்டிக்காட்டுவது என் கடமை.

### 5 ஆண்டுகளாகக் கிடப்பில் மதுரை எய்ம்ஸ் திட்டம்

இதைப்போலவே சரியாக 5 ஆண்டுகளுக்கு முன்பு 2019ல் மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் சிறப்பு மருத்துவத் திட்டத்துக்கான அடிக்கல்லை பிரதமர் மோடி அவர்கள் நாட்டினார். ஆனால் மதுரை எய்ம்ஸ் திட்டம் இன்று எந்த நிலையில் உள்ளது? மதுரை எய்ம்ஸ் திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட பல்வேறு மாநில எய்ம்ஸ் திட்டங்கள் எல்லாம் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டுக்கு வந்துவிட்ட நிலையில் மதுரை எய்ம்ஸை பொறுத்த வரை சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது.



இதுபற்றி மக்களவையில் பதிலளித்த மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர் (மன்சுக் மாண்டவியா) மதுரை எய்ம்ஸ் இயக்கத்துக்கு வந்துவிட்டதாகவும் மாணவர்கள் சேர்க்கை முடிந்து வகுப்புகள் இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறுவதாகவும் கூறினார். மதுரை எய்ம்ஸ் மாணவர்கள் 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இராமநாதபுரத்தில் கல்வி கற்கும் நிலையில் அதன் தலைமையகம் 400 கிலோமீட்டர் தொலைவில் உள்ள புதுச்சேரியில் இருப்பது மதுரை எய்ம்ஸ் இயக்கத்துக்கு வந்து விட்டது என்றும் ஒன்றிய பாஜக அரசு சொல்வது கேலிக்கூத்தல்லவா?

1800 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டுள்ள இந்த திட்டத்தை செயல்படுத்த ஜப்பான் நாட்டின் கடன் உதவிக்காக காத்து கிடப்பது அதிர்ச்சி தருகிறது. ஆண்டிற்கு 50 லட்சம் கோடி பட்ஜெட்டில் செலவிடும் ஒன்றிய அரசு, பிரதமர் கையால் அடிக்கல் நாட்டப்பட்டு துவக்கப்பட்ட இத்திட்டத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் 200 முதல் 300 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தால்கூட இந்நேரம் பணிகள் முடிவடைந்து மதுரை எய்ம்ஸ் பயன்பாட்டுக்கு வந்திருக்கும். ஆனால், அதை பாஜக அரசு செய்ய முன்வராதது தமிழ்நாட்டின் மேல் அவர்களுக்கு எந்த அளவுக்கு அக்கறை உள்ளது என்பதை படம்பிடித்து காட்டுகிறது. இது மாற்றாந்தாய் மனப்பான்மை அல்லவா?

### சேது சமுத்திர திட்டம் புறக்கணிக்கப்படுகிறது

சேதுத் திட்டம் தமிழர்களின் 160 ஆண்டு கால கனவுத் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், கர்மவீரர் காமராஜர் ஆகிய தலைவர்கள் எல்லாம் பாடுபட்டனர். போராடினர். 2005-ஆம் ஆண்டில் சேது கப்பல் கால்வாய் திட்டம் அப்போதைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் துவக்க ப் பட்டது. பணிகள் முழுவீச்சில் முன்னேறிக்கொண்டு இருந்தபோது மதவாத சக்திகளால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு காரணமாக தடை விதிக்கப்பட்டு திட்டம் முடக்கப்பட்டது. சேதுக் கால்வாய் திட்டம் தொடர்ந்து செயல்படுத்த பட வேண்டும் என்று அன்று முதல் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றவல்ல இத்திட்டம் இன்னும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதுவும் தமிழ்நாடு புறக்கணிக்கப்படு கிறது என்பதற்கு சான்றல்லவா?

நான் கப்பல் போக்குவரத்து வரத்து அமைச்சராக இருந்த போது தேசிய கடல் சார் வளர்ச்சி திட்டம் (நேஷனல் மேரிடைம் டெவலப்மென்ட் புரோகிராம்) உருவாக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டது. 2014-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தற்போது மத்திய அரசு பொறுப்பில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அதனை சாகர் மாலா என பெயர் மாற்றம் செய்து விட்டது. இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை துறைமுகங்களை இணைக்கும் நோக்கில் செயல்படுத்தபட்ட சேதுத்திட்டம் இல்லாமல் சாகர் மாலா (கடல் மாலை) முழுமையான தாக எப்படி ஒன்றாக இருக்க முடியும்.

அரசாங்கம் சென்ற ஆண்டு நாடாளு மன்றத்தில் அரசு சேதுக் கால்வாய் திட்டப் பகுதியில் கடலில் செயற்கையாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் ஏதும் இல்லை என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுகிறது என்று தெளிவாக அறிவித்து விட்டது. அதன் பிறகும் சேதுசமுத்திர கப்பல் கால்வாய் திட்டம் தொடர்ந்து கிடப்பில் போடப் பட்ட இருப்பது தமிழகத்தை வஞ்சிக்கும் செயலாகும் என்பதை எப்படி மறுக்க முடியும்?

### குடியுரிமை திருத்த சட்டம்

குடியரசுத் தலைவர் தனது உரையில் பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான் போன்ற அண்டை நாடுகளில் உள்ள துன்புறுத்தலுக்கு இலக்காகி இருக்கும் சிறுபான்மை மக்களுக்கு இந்தியாவில் குடிஉரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த உரிமை முஸ்லிம்கள் மற்றும் இலங்கை வாழ் தமிழ் சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது. மேலும், அண்மையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் சாந்தனு அவர்கள் CAA எனப்படும் குடிஉரிமை திருத்த சட்டம் ஒரு வாரத்தில் நாடு முழுவதும் அமல் படுத்தப்படும் என்று சொல்லி இருக்கிறார். ஆனால், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அவர்கள் மாநிலத்தில் CAA சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று உறுதி படத்தெரிவித்துவிட்டார். அதைப்போல, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களும் தமிழ்நாட்டில் ஒரு நாளும் குடிஉரிமை திருத்த சட்டம் செயல்படுத்தப் படமாட்டாது என்று மிக உறுதியாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி அறிவித்து விட்டார். அதைப் போலவே எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் அனைத்தும் CAA திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப்போவதில்லை.

இங்கே மற்றும் ஒரு செய்தியை குறிப்பிட்ட ஆக வேண்டும். மாநிலங்கள் அவையில் அ.தி.மு.க.வின் 13 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்த காரணத்தால் தான் குடிஉரிமை சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற முடிந்தது. இப்படிப்பட்ட இழிசெயலை அ.தி.மு.க. உறுப்பினர்கள் செய்துவிட்டு இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

### வேலைவாய்ப்பும், மோடியின் நிறைவேறாத வாக்குறுதியும்

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று மோடி தனது 2014 தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி கடந்த 10 ஆண்டுகளில் 20 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் உண்மையில் புதிதாக ஒருவருக்கு கூட வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்பது தான் நிதர்சனம். நிலைமை இவ்வாறு இருக்க குடியரசு தலைவர் அவர்கள் தனது உரையின் 5வது பத்தியில், அரசு அர்ப்பணிப்பு முனைப்புடன் செயல்பட்டதன் விளைவாக சென்ற ஆண்டில் மட்டும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வழங்கப் பட்டது என்று கூறி உள்ளது சரியல்ல.

### சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு நிதி மறுப்பு

தனது உரையில் 15-வது பத்தியில் குடியரசு தலைவர் திருமதி முர்மு அவர்கள் 5 நகர்களில் மட்டுமே இருந்த மெட்ரோ ரயில் திட்டம் தற்போது 20 நகர்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக பெருமிதம் பொங்க குறிப்பிட்டார். ஆனால், சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒன்றிய அரசு தனது பங்களிப்பு நிதியைத் தரவில்லை. இது தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் பிரதமர் மோடி க்கு மூன்று, நான்கு முறை கடிதங்கள எழுதி வேண்டுகோள் வைத்த பிறகும் மத்திய அரசு நிதி வழங்கவில்லையே ஏன்?

### ஒரே நாடு, ஒரே வரி

ஒரே நாடு ஒரே வரி என்ற முழக்கத்துடன் ஜிஎஸ்டி வரியை பா.ஜ.க. அரசு தீவிரமாக அமல் படுத்தி வருகிறது. ஜிஎஸ்டி தவிர மாநில வரிகள் அனைத்தும் பெரும்பாலும் அகற்றப்பட்டு விட்டன என குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் 11ஆம்பத்தியில் தெரிவித்துள்ளார். ஆனால் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு மட்டும் ஜி.எஸ்.டி. விதிக்கப் படுவதில்லை. பல்வேறு வரிகளை மத்திய மாநில அரசுகள் பெட்ரோல் டீசல் மீது விதிப்பதால் இவற்றின் விலை அதிகமாக இருப்பதுடன் ஒன்றிய அரசு பெரிய அளவில் வரிவசூல் செய்து குவிக்கிறது. மாறாக பெட்ரோல் டீசல் மீது அதிக பட்ச வரிவிகதமான 28 விழுக்காடு விதித்தால் கூட இன்றைய நிலையில் பெட்ரோல் விலை லிட்டருக்கு85 ரூபாய், டீசல் விலை ரூபாய் 75 என்ற அளவைத் தாண்டாது. வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 5 விழுக்காடுஜிஎஸ்டிவரி விதிக்கப்படுகிறது. இது நியாயம் அற்றது. வைத்து நடுத்தர மக்கள் பயன்படுத்தும் சமையல் கேஸ் வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்க பட வேண்டும். 2014 ல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு காலத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூபாய் 400 தான். இன்று அதன் விலை ரூபாய் 900. மத்திய அரசின் இந்த அணுகுமுறை சரிதானா?

### இ.பி.எஃப். தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஓய்வூதியம் உயர்த்துக

சென்ற 10 ஆண்டுகளாக தொழிலாளர் வைப்பு நிதி ஓய்வூதியம் பெறும் லட்சக் கணக்கான ஓய்வு பெற்ற ஊழியர்கள் எழுபது வயதைக் கடந்த நிலையிலும், 10 ஆண்டுகள் சென்ற பிறகும், குறைந்த பட்ச ஓய்வூதியமாக வெறும் ஆயிரம் மட்டுமே பெற்று வருவது மிகுந்த வேதனைக்குரிய விஷயம். நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் தொழில் நிலையங்களில் 20 ஆண்டுகளாக பணியாற்றிய இவர்கள் சொற்பத் தொகையை ஓய்வூதியமாகப் பெறுவது ஏற்புடையதல்ல. ஆண்டுக்கணக்கில் ஓய்வூதிய உயர்வு கோரி போராடி வரும் இவர்கள் கோரிக்கையை அரசு நிறைவேற்ற முன் வர வேண்டும். இபிஎஃப் ஊழியர்கள் தொழிலாளர்கள் பெறும் ஓய்வூதியம் குறைந்த பட்சம் ரூபாய் 3000 ஆக உயர்த்தி வழங்கப் பட வேண்டும். தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டின் குடும்ப தலைவிகளுக்கும் கூட மாதம்தோறும் ரூ1000/ கலைஞர் மகளிர் உரிமை தொகையாக வழங்கப்படுகிறது என்பதை பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குடியரசுத் தலைவர் தனது உரையில் அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் தான் எடுத்துக் கூறி உள்ளார். தனது சொந்த கருத்துக்கள் எதையும் சொல்லவில்லை. அவரது உரை அரசு தயாரித்த உரை. அதனை குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் அச்சு பிறழாமல் கடைசி வார்த்தை வரை அப்படியே பேசி உள்ளார். அதுதான் மரபு. அதற்காக திருமதி முர்மு அவர்களுக்கு நன்றி கூறியே ஆக வேண்டும்.

அதற்காக அவரது உரையில் பிரதிபலிக்கப்பட்டுள்ள, தி.மு.க. வின் கொள்கை கோட்பாடுகட்கு எதிரான ஒன்றிய அரசின் கொள்கைகள் செயல்பாடுகள் அனைத்தையும் திமுக ஏற்பதாக பொருள் அல்ல. குடியரசுத் தலைவரைப் போல் அல்லாமல் பல ஆளுநர்கள் குறிப்பாக தமிழ்நாடு ஆளுநர் மாநில அரசு கொடுத்த உரையில் இல்லாத விஷயங்களைப் பேசினார். சில ஆளுநர்கள் மாநில அரசு தங்கள் அரசு என்பதை மறந்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் போட்டி போடும் வகையில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதை வழக்கமாகவே வைத்துள்ளனர்.

பிரிட்டிஷ் கால ஆளுநர்கள் போல தாங்கள் தான் அனைத்தும் அறிந்தவர்கள் என்ற போக்கில் செயல்படுகிறார்கள். அரசியலமைப்பு சட்டத்தை மதிக்காமல் கோடிக் கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசுகளை மதிக்காமல் மக்கள் தீர்ப்பை காலடியில் போட்டு மிதிக்கும் விதத்தில் செயல்படுகிறார்கள். இப்படி சில ஆளுநர்கள் செயல்படுவதை பார்த்தால் அவர்கள் தத்தம் தலைக்குமேல் ஞான ஒளி வட்டம் இருப்பதாக கருதிக்கொண்டு ஆணவத்துடன் செயல்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. அத்தகைய ஆளுநர்களை கண்டித்து அவர்களை அரசியலமைப்புச் சட்டத்தின் படி பணியாற்ற வைக்க குடியரசுத் தலைவர் முன்வர வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் உரையாற்றினார்.




ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவினை முன்னிட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணம் மற்றும் வாகனத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் அமைதிப் பேரணி நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்தப் பேரணியானது நேதாஜி சிலையிலிருந்து துவங்கி மணிக்கூண்டு வழியாக மோகனூர் சாலையை வந்தடைந்தது. இதையடுத்து மோகனூர் சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த பேரணியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம் பொன்னுசாமி, மாநில நிர்வாகிகள் பார்.இளங்கோவன், இராணி, மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், நகர் மன்றத் தலைவர் கலாநிதி துணைத்தலைவர் பூபதி. நாமக்கல் மேற்கு நகரச் செயலாளர் சிவக்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் தி.மு.க. செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், நகர தி.மு.க. நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பேரறிஞர் அண்ணாவின் 55 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப்பேரணி மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் சத்திரம் பேருந்து நிலையம் காமராஜர் திருஉருவச்சிலையில் இருந்து சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட மாநகர நிர்வாகிகள் அரங்கநாதன், சேகரன், செந்தில், பகுதிச் செயலாளர் மோகன் மற்றும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை மாநகரின் விளையாட்டு உள்கட்டமைப்புகளை

# சர்வதேசத் தரத்தில் மேம்படுத்திட ரூ.25 கோடி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!



**சென்னை, பிப்.5 –**

**சென்னை மாநகரின் விளையாட்டு உள்கட்டமைப்புகளை சர்வதேச தரத்தில் மேம்படுத்திட ரூ.25 கோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டு இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதிலும், தமிழ்நாட்டில் சர்வதேசத் தரத்திலான உள்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும் தனிக் கவனம் செலுத்துவதற்காக முதன் முதலில் விளையாட்டுத் துறைக்கென ஒரு தனி அமைச்சர் பதவியை 9-12-1999 அன்று ஏற்படுத்தியும், தலைமைச் செயலகத்தில் விளையாட்டுத் துறையை ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின்கீழ் தனித்துறையாக 2000 ஆண்டு ஜுன் திங்களில் ஏற்படுத்தியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, 2021இல் பொறுப்பேற்ற முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டுக் கட்டமைப்புகளை ஒவ்வொரு விளையாட்டுக்கும் தமிழ்நாட்டில் ஏற்படுத்திட வேண்டும் என்று முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள்.

அதற்கு ஏற்ப இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் தமிழ்நாட்டின் விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயலாற்றுகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் முதல் கட்டமாக சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்துவதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டு ஒன்றிய அரசின் ஒப்புதலோடு பிரதமர் திரு.மோடி அவர்களை அழைத்து 2022ஆம் ஆண்டில் **44வது செஸ்ஒலிம்பியாட்** போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு உலக அளவில் பாராட்டுகளைப் பெற்றது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கடும் உழைப்பால் அண்மையில், **கேலோ இந்தியா** 2023 விளையாட்டுப் போட்டிகள், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் இந்திய பிரதமர் திரு. மோடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு ஏறத்தாழ 5,000த்திற்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்று வெற்றிகரமாகநடைபெற்றுமுடிந்துள்ளன. இந்தப் போட்டியில் 38 **தங்கப் பதக்கங்கள்** பெற்று தமிழ்நாடு பதக்கப்பட்டியலில் 2-ஆம் இடம் பெற்று, மாபெரும் சாதனை நிகழ்ந்துள்ளது. இவற்றுக்கெல்லாம் இந்த அரசும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் விளையாட்டுக் கலை வளர்ச்சிக்கு அளித்து வரும் அளப்பரிய ஊக்கமும் ஒத்துழைப்புமே காரணம் ஆகும்.

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சென்னையில் உள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்களில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில் சென்னை மாநகரில் உள்ள 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான விளையாட்டு உட்கட்டமைப்புகளைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்தி மேம்படுத்திட மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம் ரூ.11 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் 5 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஜவர்ஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம் 2 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டிலும், வேளச்சேரி நீச்சல்குளம் வளாகம் 4 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டிலும் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம் 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்பட மொத்தம் 25 கோடி ரூபாய் நிதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது இந்திய விளையாட்டுத்துறையின் தலைமையகமாக தமிழ்நாட்டை உருவாக்கிட முனைந்திடும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உயர்ந்த நோக்கத்திற்கு ஒரு சீரிய சான்றாகும்.

பிப். 8 அன்று நாடாளுமன்ற வளாகத்தில்

# தி.மு.க. எம்.பி.க்கள் கருஞ்சட்டை ஆர்ப்பாட்டம்!

## தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

சென்னை, பிப். 5 –

திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழுத் தலைவரான டி.ஆர். பாலு வெளியிட்டுள்ள அறிக்கையில் தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ஒன்றிய அரசின் இடைக்கால நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு புயல் வெள்ள நிவாரண நிதி உதவி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்யாத ஓரவஞ்சனையைக் கண்டித்து எதிர் வரும் பிப்ரவரி 8 அன்று காலை 10.00 மணிக்கு தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சி எம்.பி.க்கள் டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்திலுள்ள காந்தி சிலை முன்பு கருஞ்சட்டை அணிந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தோழமைக் கட்சி எம்.பி.க்களும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

**தமிழ்நாடு புறக்கணிப்பு!**

சென்ற 1.2.2024 அன்று, வரும் நிதியாண்டு 2024-25க்கான இந்திய ஒன்றிய அரசின் இடைக்கால நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார். அதில், அன்மையில் 2023 டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்ட வரலாறு காணாத புயல் மழை வெள்ள சேதங்களை சரிசெய்யவும் நிவாரண உதவியாகவும் 37000 கோடி ரூபாய் தந்து உதவிட வேண்டும் என்ற தமிழ்நாடு அரசு கோரிக்கை பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. அதைப் போல, மதுரை எய்ம்ஸ் உள்ளிட்ட தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு குறித்தும் இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்புக்கள் இடம் பெறவில்லை. இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு அன்னிய முதலீடு திரட்டும் நோக்கில் ஸ்பெயின் நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை வன்மையாக கண்டித்ததுடன் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் காந்தி சிலை எதிரில் கருஞ்சட்டை அணிந்து போராட்டம் நடத்துவர் என்றும் அறிவித்தார். அதன்படி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8.2.2024 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர்.

31.1.2024 அன்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்கள் நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நேற்று முன்தினம் (2.2.2024) அன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு தி.மு.க. சார்பில் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவரான டி.ஆர்.பாலு ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை குறித்து தனது கடும் கண்டனங்களை வெளியிட்டார்.

**ஆளுநர்களை கண்டிக்க வேண்டும்!**

குடியரசுத் தலைவர் தனது உரையில் அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் தான் எடுத்துக் கூறி உள்ளார். தனது சொந்த கருத்துக்கள் எதையும் சொல்லவில்லை. அவரது உரை அரசு தயாரித்த உரை. அதனை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்கள் அச்சு பிறழாமல் கடைசி வார்த்தை வரை அப்படியே பேசி உள்ளார். அதுதான் மரபு. அதற்காக திருமதி முர்மு அவர்களுக்கு நன்றி கூறியே ஆக வேண்டும். அதற்காக அவரது உரையில் பிரதிபலிக்கப்பட்டுள்ள, தி.மு.க.வின் கொள்கை கோட்பாடுகட்கு எதிரான ஒன்றிய அரசின் கொள்கைகள் செயல்பாடுகள் அனைத்தையும் தி.மு.க. ஏற்பதாக பொருள் அல்ல. குடியரசுத் தலைவரைப் போல் அல்லாமல் பல ஆளுநர்கள் குறிப்பாக தமிழ்நாடு ஆளுநர் மாநில அரசு கொடுத்த உரையில் இல்லாத விஷயங்களைப் பேசினார். சில ஆளுநர்கள் மாநில அரசு தங்கள் அரசு என்பதை மறந்து எதிர்க் கட்சித் தலைவர்களுடன் போட்டி போடும் வகையில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதை வழக்கமாகவே வைத்துள்ளனர். பிரிட்டிஷ் கால ஆளுநர்கள் போல தாங்கள் தான் அனைத்தும் அறிந்தவர்கள் என்ற போக்கில் செயல்படுகிறார்கள். அரசியலமைப்பு சட்டத்தை மதிக்காமல் கோடிக் கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மதிக்காமல் மக்கள் தீர்ப்பை காலடியில் போட்டு மிதிக்கும் விதத்தில் செயல்படுகிறார்கள். அத்தகைய ஆளுநர்களை கண்டித்து அவர்களை அரசியலமைப்புச் சட்டத்தின படி பணியாற்ற வைக்க குடியரசுத் தலைவர் முன்வர வேண்டும் என்று 2.2.2024 அன்று பாராளுமன்றத்தில் பேசியது நினைவு கூரத்தக்கது.

2024 நாடாளுமன்றத் தேர்தல்

# தி.மு.க. தேர்தல் அறிக்கைக் குழுவிற்குப் பரிந்துரைகளை அனுப்புங்கள்!!

**உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் - DMKManifesto2024-க்கான** உங்கள் பதிவுகளை வரவேற்கிறது.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கவும், மாநில சுயாட்சியை உரத்துச் சொல்வதற்குமான தேர்தல்!

நாடாளுமன்றத் தேர்தல் 2024-க்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையை வடிவமைப்பதில் தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பை தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு எதிர்பார்க்கிறது!

தங்களின் கோரிக்கைகளை அனுப்பி வைத்து, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் தேர்தல் அறிக்கை தயாரிப்பில் பங்களிக்க முடியும்!

- **எழுத்துப்பூர்வமாக நீங்கள் சமர்ப்பிக்கலாம்:**

**தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு, அண்ணா அறிவாலயம், எண் 367/369, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018** என்ற முகவரிக்கு கடிதங்கள் மூலமாகவோ அல்லது **dmkmanifesto2024@dmk.in**ற்கு மின்னஞ்சல்கள் அனுப்புவதன் மூலமாகவோ உங்கள் பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலம் உங்களின் தேவைகளை புரிந்துகொள்வதில் தி.மு.க. தேர்தல் அறிக்கைக் குழு மிகவும் ஆர்வமாக உள்ளது.

- **தொலைபேசி எண் மூலம் பகிருங்கள்:**

நீங்கள் நேரடியாக தொலைபேசியில் அழைத்து உங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்காக **08069556900** - இல் ஒரு சிறப்பு ஹாட்லைன் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசி எண் தொடர்பு மூலம் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு உங்கள் பரிந்துரைகளை அறிந்து கொள்ளத் தயாராக உள்ளது.

- **சமூக ஊடகங்களில் பதிவிடுங்கள்:**

**#DMKManifesto2024** என்ற ஹேஷ்டேக்குடன் [@DMKManifesto2024] எங்களுக்கு **ட்விட்** செய்யுங்கள் அல்லது உங்கள் பதிவுகளை பேஸ்புக் பக்கம் - DMKManifesto2024 அல்லது **வாட்ஸ்அப் எண் 9043299441** மூலம் உங்கள் பரிந்துரைகளை சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- **டவுன் ஹால் கூட்டங்களில் பங்குபெறுங்கள்:**

வரவிருக்கும் நாட்களில், **தமிழ்நாடு முழுவதும் தேர்தல் அறிக்கைக் குழு பயணித்து டவுன் ஹால் கூட்டங்களை** ஏற்பாடு செய்துள்ளது. குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, உங்கள் கருத்துகளை நேரில் தெரிவிக்கலாம்.

- **ஆன்லைன் படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கலாம்:**

இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம், உங்களின் தேர்தல் அறிக்கை பரிந்துரைகளை ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியும்!

உங்களின் கோரிக்கைகள் அல்லது பரிந்துரைகள் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வடிவமைக்க உதவிகரமாக இருக்கும். அவை நம் சமூகத்தின் பல்வேறு தேவைகள் மற்றும் விருப்பங்கள் தேர்தல் அறிக்கையில் எதிரொலிப்பதை உறுதிசெய்யும். வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கு தி.மு.க. அறிக்கை குழு அர்ப்பணிப்புடன் உள்ளது.

தேர்தல் அறிக்கை பதிவீடுகளுக்கான காலக்கெடு **25/02/2024** வரை உள்ளது. அதன் பிறகு, ஒரு விரிவான அறிக்கையை உருவாக்க, பெறப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் தி.மு.க. அறிக்கை குழு மதிப்பீடு செய்து அதிகாரப்பூர்வத் தேர்தல் அறிக்கையை வெளியிடும்.

மக்களாட்சி நடைமுறையின் ஒருங்கிணைந்த பகுதியாக நீங்கள் இருப்பதற்கு நன்றி.

தமிழ்நாட்டை சுயாட்சி மாநிலமாகவும், இந்தியாவின் முன்னோடி மாநிலமாகவும் நாம் ஒன்றிணைந்து உருவாக்குவோம்.

சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!



நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன.தென்சென்னை மக்களவை தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், மணமேல்குடி, ஆவுடையார்கோவில், விராலிமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களையும், புதுப்பிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட சமரச மையத்தினையும், சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி நீதியரசர் சஞ்சய் வி கங்காபுர்வாலா, சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள்ஆர்.மகாதேவன், ஆர்.சுரேஷ்குமார், திருமதி.வி.பவானி சுப்பராயன், ஆர்.விஜயகுமார், பி.டி.ஆதிகேசவலு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (03.02.2024) காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்து, புதுக்கோட்டை நீதிமன்றங்கள் செயல்படும் பாரம்பரியம் மிகுந்த கட்டிடங்களை புதுபித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா. மெர்சி ரம்யா, புதுக்கோட்டை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி கா.பூரண ஜெய ஆனந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே, பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர் (பொது) கே.பி.சத்யமூர்த்தி மற்றும் வழக்கறிஞர் சங்கத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்

## தென்காசி வடக்கு மாவட்டம்

# குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம்!

**கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய மூன்று ஒன்றியங்கள், குருவிகுளம் கிழக்கு, குருவி குளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவி குளம் தெற்கு ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியத்திற்கான ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.**

**அவ்வாறு பிரிக்கப்பட்ட குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின் வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர் கொண்டதாக அமையும்.**

**குருவிகுளம் கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.மைப்பாறை, 2.வரகனூர், 3.முக்கூட்டுமலை, 4.இளையரசனேந்தல், 5.புளியங்குளம், 6.நக்கலமுத்தன்பட்டி, 7.சித்திரப்பட்டி, 8.பழையஅப்பனேரி, 9.அய்யனேரி, 10.வெங்கடாசலபுரம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**குருவிகுளம் கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர்** : **பி. குணசேகரன், பி.இ.,**
1/181, வடக்குத் தெரு,
நக்கலமுத்தன்பட்டி,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.காரிசாத்தான், 2.கலிங்கப்பட்டி, 3.சத்திரப்பட்டி, 4.சங்குபட்டி, 5.வெள்ளாகுளம், 6.உமையத்தலைவன்பட்டி, 7.அ.கரிசல்குளம், 8.அழகாபுரி, 9.சத்திரகொண்டான், 10.பெருங்கோட்டூர் ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் திருவேங்கடம் பேரூர்.

**குருவிகுளம் மேற்கு ஒன்றியம்**

**செயலாளர் :** : **செ.சேர்மத்துரை,**
38-பி, அக்ரகாரம் தெரு,
திருவேங்கடம் தாலுகா,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.கே.ஆலங்குளம், 2.அத்திப்பட்டி, 3.இராமலிங்கபுரம், 4.குறிஞ்சாகுளம், 5.குளக்கட்டாக்குறிச்சி, 6.வடக்குப்பட்டி, 7.பிச்சைதலைவன்பட்டி, 8.பிள்ளையார்குளம், 9. ஜமீன்தேவர்குளம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**குருவிகுளம் வடக்கு ஒன்றியம்**

**செயலாளர்** : **ஆர். கிறிஸ்டோபர்,**
1/156, தெற்கு தெரு,
பிச்சைத்தலைவன்பட்டி,
இளையரசனேந்தல்,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.வடக்குகுருவிகுளம், 2.தெற்குகுருவிகுளம், 3.பழங்கோட்டை, 4.நாலாந்துலா, 5.கே.கரிசல்குளம், 6.களப்பாங்குளம், 7.சாயமலை, 8.சிதம்பராபுரம், 9.செவல்குளம், 10. வாகைகுளம்.

**குருவிகுளம் தெற்கு ஒன்றியம்**

**செயலாளர்** : **மா. கடற்கரை**
56/8, நாடார் சாவடி தெரு,
குருவிகுளம் 627 754.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 3-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



தருமபுரி கிழக்கு மாவட்ட நகர தி.மு.கழகம் சார்பில் அறிவுலக மேதை தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் தருமபுரி ராஜகோபால் பூங்கா அருகில் இருந்து புறப்பட்டு ஆறுமுக ஆச்சாரி தெரு வழியாகச் சென்று நான்கு ரோட்டில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ தடங்கம், பெ.சுப்ரமணி தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. உடன் நகரச் செயலாளர் நாட்டான்மாது,மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ்,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகாதேவி, உமாசங்கர், ஆறுமுகம், மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச்செல்வன், செந்தில்குமார் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, நகர மன்றத் தலைவர் திருமதி. லட்சுமி மாது மற்றும் ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்ஆர்.சேட்டு, வைகுந்தம்,கருணாநிதி, சண்முகம், சபரிநாதன் மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மே.அன்பழகன் மற்றும் நகர நிர்வாகிகள் முல்லைவேந்தன்,அழகுவேல்,அன்பழகன் கோமளவள்ளி ரவி கனகராஜ், சுருளிராஜன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் புவனேஸ்வரன், மாதேஸ்வரன், ஜெகன், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் டி.ஏ.குமார், காசி நாதன், பொன்.மகேஸ்வரன்,ரஹீம், பெரியண்ணன்,விஜயன்,ஹரி விக்னேஷ்,பத்மா மற்றும் துணை அமைப்பாளர்கள் வானவில்.சண்முகம், உதயசூரியன், டி.ஏ.ரவி,வெல்டிங் ராஜா, ஆர்.கே.முகமது அசோக்குமார் செல்வராஜ், ரவி, சக்திவேல் சூர்யா தமிழ்ச்செல்வன், குமுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை 'எய்ம்ஸ்'

# மருத்துவமனை கட்டுவதில் காலதாமதம் ஏன்?

### மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, பிப்.5-*

தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டும் பணியில் காலதாமதம் ஏன்? கட்டுமானப் பணியை விரைவுபடுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? என்று நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் எழுப்பியுள்ள கேள்வி வருமாறு:-

தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் அமைக்கும் பணியை விரைவுபடுத்த மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அதிகப்படியான கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்கிய நிதியின் விவரங்கள் மற்றும் JICA விலிருந்து நிதி பெறுவதில் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?



(மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை செலவழிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் மதுரை எய்ம்ஸ் கட்டப்படும் நேரம்; மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களில் எய்ம்ஸ் அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா?

அப்படியானால், நாட்டின் பல்வேறு இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட / செலவிடப்பட்ட நிதி விவரங்கள், இடம்வாரியாக தெரிவிக்கவும்?

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தமிழ் நாட்டில் மதுரையில் எய்ம்ஸ் அமைப்பதற்கு, எல்லைச் சுவர் கட்டுவது உள்ளிட்ட முதலீட்டுக்கு முந்தைய நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. திட்ட மேலாண்மை ஆலோசகர் (PMC) நியமிக்கப்பட்டுள்ளார். மாஸ்டர் பிளான் இறுதி செய்யப்பட்டுள்ளது. முக்கிய சிவில் பணிக்கான தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 26, 2021 அன்று ஜப்பான் அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி, கடன் தொகை ஜப்பானிய யென் 22,788,000,000 மட்டுமே.

மதுரை எய்ம்ஸ் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி அக்டோபர், 2026 ஆகும். இந்திய அரசு திட்டத்தின் முன் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ரூ.12.35 கோடி மற்றும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் திட்ட மேலாண்மை ஆலோசனைக்கு ரூ.6கோடி இது வரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## 35 ஆண்டுகளுக்கு மேல் முடியாத பட்டா மாற்றம்!

# மூன்றே நாளில் முடித்து வைத்தது மக்களுடன் முதல்வர் திட்டம்!

### அளவிலா ஆனந்தத்தில் விவசாயி சந்திரசேகரன்!

*தஞ்சை, பிப்.5-*

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், வலையப்பேட்டை வருவாய் கிராமம், மாங்குடியில் வசிப்பவர் முத்தையன் மகன் சந்திரசேகரன். இவர் ஒரு பரம்பரை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மாங்குடி கிராமத்தைச் சேர்ந்த மாரிமுத்து அவர்களிடம் 1988-ஆம் ஆண்டில் புல எண்.32 உட்பிரிவு 9சி; இதில் 7 ஏர்ஸ், அதாவது, 21 செண்ட் நிலத்தைக் கிரயம் வாங்கினார்.

இந்த நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்திட சந்திரசேகரன் பல ஆண்டுகளாக முயன்றும் பட்டா மாற்றம் நடைபெறவில்லை.


முந்தைய ஆட்சியில் 18-4-2018 அன்று மக்கள் நேர்காணல் முகாம் வலையப்பேட்டை வருவாய் கிராமம், மாங்குடியில் நடைபெற்றது. அம்முகாமில் கலந்து கொண்ட விவசாயி சந்திரசேகரன் இந்த நிலத்திற்குப் பட்டா மாற்றம் கோரி மனு கொடுத்தார். (மனு எண்.84, நாள் 18-4-2018 )

நீண்டகாலமாக பட்டா மாற்றம் கிடைக்கப்பெறாத நிலையில் தற்போது விவசாயி சந்திரசேகரன் அண்மையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் குறை தீர்க்கும் திட்டமாக, "மக்களுடன் முதல்வர்" எனும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திலும், அந்தந்த வட்டார தாசில்தார் தலைமையில் முகாம் நடத்தி மக்கள் குறைகளைக் கேட்டுத் தீர்வு காணுமாறு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். அத்திட்டத்தின்படி இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கைகள் நிறைவேறி மக்கள் இந்த அரசைப் பாராட்டி வருகின்றனர்.




மக்களுடன் முதல்வர் திட்டத்தின்படி, கும்பகோணம் தாசில்தாரர் அலுவலகத்திலிருந்து வலையப்பேட்டை வருவாய் கிராமத்தைச் சேர்ந்த மாங்குடி கிராமத்திலுள்ள சமூகக் கூடத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் 20-12-2023 அன்று நடைபெற்றது.

இந்த முகாமிற்கும் உரிய ஆவணங்களுடன் சென்று சந்திரசேகரன் பட்டா மாற்றம் கோரி விண்ணப்பம் செய்தார். அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 2-1-2024 அன்று சந்திரசேகரனுக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தின் இணைய சேவை மூலம் வெளியிடப்பட்டது.




பட்டா மாற்றம் தனக்குக் கிடைத்த செய்தியை இணையத்தின் மூலம் அறிந்து அளவிலா ஆனந்தம் அடைந்தார் விவசாயி சந்திரசேகரன்.

அந்த ஆனந்தத்துடன் இந்த மாற்றத்திற்குக் காரணமான மக்களுடன் முதல்வர் திட்டத்தையும் - முதலமைச்சர் அவர்களையும் நினைந்து நினைந்து வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறார் விவசாயி சந்திரசேகரன்.



## ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையில்

# பிப்.5 ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு!

### ஜார்க்கண்ட் புதிய முதலமைச்சர் சம்பாய் சோரன் முடிவு!


ராஞ்சி, பிப்.5-

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி துணைத் தலைவர் சம்பாய் சோரன், ஜார்க்கண்ட் முதலமைச்சராக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து, சட்டப்பேரவையில் 10 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். அதன்படி இன்று (5ம் தேதி) அவர் சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த இருப்பதாக கூட்டணி கட்சியான காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இதை ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் மூத்த தலைவர் மனோஜ் பாண்டேவும் உறுதி செய்துள்ளார். தங்கள் கூட்டணிக்கு 48 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாகவும், இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பில் எளிதில் வெற்றி பெறுவோம் என்றும் மனோஜ் பாண்டே குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்

### பிப்ரவரி 5 (2021)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் அணுக்கமாக இருந்து அரிய முறையில் தமிழ் எழுத்துப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.**

**தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளில், அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவரும் – தன் இறுதி மூச்சு வரை கழகத்தின் உறுதியான உடன்பிறப்புகளில் ஒருவராக விளங்கியவர்.**

**71 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேரமும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு, நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வந்த தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், கழக ஏடுகளான 'மாலைமணி', 'நம்நாடு', 'கழகக்குரல்' உள்ளிட்ட பல்வேறு ஏடுகளில் பணியாற்றியதுடன், முதலில் 'கவிக்கொண்டல்' என்றும் பின்னர், 'மீண்டும் கவிக்கொண்டல்' என்றும் தொடர்ந்து 32 ஆண்டுகள் அவ்விதழை நடத்தியவர். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.**

**மவுண்ட்ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை 'அண்ணாசாலை அஞ்சல் அலுவலகம்' என்று பெயர் மாற்றிட காரணமாக இருந்தவர்.**

**2018ஆம் ஆண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமைக் கழகத்தின் சார்பில் "பேராசிரியர் விருது" வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மாநில சுயாட்சியை வென்றெடுக்கும்

# மக்களுக்கான அரசு ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைப்போம்!

### அண்ணா நினைவு நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**மாட்ரிட், (ஸ்பெயின்) பிப். 5-**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் தலைமகனான, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி, ஸ்பெயின் நாட்டின், மாட்ரிட் நகரில் தாம் தங்கியுள்ள இடத்தில், அண்ணா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார்.**

**இந்நாளில் அவர் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு, ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்த்தாயின் தலைமகனாகப் பிறந்து, நமக்கெல்லாம் அண்ணனாக அறிவு மன்னனாக வழிகாட்டிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவுநாள்!

இன்று அமைதிப் பேரணியாகச் சென்ற கழக உடன்பிறப்புகள், பேரறிஞர்



அண்ணா சொன்ன கடமை கண்ணியம் கட்டுப்பாட்டோடு உழைத்து மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்!

**எண்ணித் துணிக கருமம்!**

இவ்வாறு தமது சமூக வலைதளப் பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பேரறிஞர் பெருந்தகை – 'திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் – அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி, கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் – பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக்கணக்கில் பங்கேற்றனர். அண்ணா நினைவிடத்தில் பேரணி நிறைவுற்றது. அங்கு அரசின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் தூவி வணங்கினார்கள்.

## பாதுகாப்புத் துறையை வலுப்படுத்த,

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி?

புதுடெல்லி, பிப்.5-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில், பாதுப்புத் துறையை மேம்படுத்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் செயலாக் கட்டங்கள் உள்ளனவா? என்றும், பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சியை வலுப்படுத்தவும், நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்கவும் ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு



தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர், அஜய் பட் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

தனியார் மற்றும் அரசுத் துறைகளின் மூலம் பாதுகாப்புத் துறையில் தளவாடங்களை கொள்முதல் செய்யும் வகையில், பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதல் நெறிமுறைகள் 2020 வகுக்கப்பட்டுள்ளன என்றும், சிறப்புத் திட்டங்களின் வாயிலாக பாது காப்பு துறைக்கு தேவையான தளவாடங்களை பரிசோதனை செய்யவும், கொள் முதல் செய்யும் புதிய தளவாடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், உத்தர் பிரதேச பாதுகாப்பு தளவாடங்கள் தொழிற்சாலை வளாகங்கள், தமிழ்நாடு பாதுகாப்பு தளவாடங்கள் தொழிற்சாலை வளாகங்கள் என்று இரு பெரும் வளாகங்களை ஒன்றிய அரசு ஏற்படுத்த பாதுகாப்பு துறைக்கு தேவையான உற்பத்தியை பெருக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பு தளவாட சோதனைகளின் கட்டமைப்பை அதிகப்படுத்தவும், விமானப்படை தயா ரிப்புகளை மேம்படுத்தவும் தேவையான சோதனை சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், சிறு குறு தொழிற்சாலைகளின் உதவியுடன் புத்தாக்க நிறுவனங்களை பாதுகாப்பு துறைக்கு தேவையான தளவாடங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தவும் அரசு முயற்சிகள் எடுத்து வருவதாகவும், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், இந்திய அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பாது காப்பு துறைக்கு தேவையான ஆராய்ச்சிகளை மேம்படுத்தவும், தேவையான திட்டங் களை அரசு ஏற்படுத்தியுள்ளது என்றும்,

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன், தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான நிதிச் சலுகையை அரசு வழங்கி வருவதாகவும், 15-க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு இளைஞர்களுக்கு ஆராய்ச்சியில் ஈடுபட பாதுகாப்பு துறை மேற்கொண்டு வருவதாக ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர், அஜய் பட், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

### கோபிசெட்டிபாளையம் நகர துணைச் செயலாளர்

# பி.மெய்யழகன் மறைவு!

### என். நல்லசிவம் - கழகத்தினர் அஞ்சலி!

ஈரோடு, பிப்.5-

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர துணைச் செயலாளரும், முன்னாள் நகரமன்ற உறுப்பினருமான பி.மெய்யழகன் அவர்கள் நேற்று முன்தினம் (03.02.2024-சனிக்கிழமை) காலை இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்து மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் மற்றும் கழக நிர்வாகிகள், ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பொற்செல்வி இளமுருகு

### பிப்ரவரி 5 (2013)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.**

**தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் "கலைஞர் விருதினை" அளித்து சிறப்பு செய்தார்.**

**"1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு திருமிகு. கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கீழ்கண்ட அட்டவணைப்படி பயணம் மேற்கொண்டு கழக நிர்வாகிகள், தொழிற்துறையினர், கல்வியாளர்கள், பல்துறை வல்லுநர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்திப்பார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 பிப்ரவரி-5 | தூத்துக்குடி | தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம் |
| " பிப்ரவரி-6 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மாநகர் |
| " பிப்ரவரி-7 | மதுரை | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| " பிப்ரவரி-8 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்தியு, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை , மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி-9 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தியு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி-10 | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| " பிப்ரவரி-11 | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கரூர் |
| " பிப்ரவரி-16 | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| " பிப்ரவரி-17 | வேலூர் | வேலூர் , இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| " பிப்ரவரி-18 | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி-20 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி-21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 03.02.2024

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை – அண்ணா அறிவாலயம் – 'முரசொலி மாறன் வளாக'க் கூட்ட அரங்கில் – நேற்று முன்தினம் மாலை, கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணிக் கட்சி தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினர் சுப்புராயன், ஜி.பழனிச்சாமி, வீரபாண்டி ஆகியோர் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.



நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. வடசென்னை மக்களவை தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

### செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப். 5 -

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவித்துள்ளார். தி.மு.க சிறுபான்மையி னர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (06-02-2024 - செவ்வாய்க் கிழமை) காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவைச் சார்ந்த மாநில நிர்வாகிகள் உடன் மாவட்ட மற்றும் மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு. செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) தெரிவித்துள்ளார்.

### கரூர் மாவட்டம் நெரூர் அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில்

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்!

கரூர், பிப். 5 -

ராஜராஜ சோழன் காலத்திற்குப் பிறகு சிதலமடைந்த தொன்மையான கோவில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்துவது கழக ஆட்சியில் தான் என்று அமைச்சர் சேகர் பாபு தெரிவித்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு 1000 ஆண்டுகள் தொன்மையான கரூர் மாவட்டம் நெரூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் புணரமைப்பு திருப்பணியினை துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி.பிரபாகர், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம்(குளித்தலை). க.சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்). அறநிலையத் துறை இணை இயக்குனர் சி.குமரதுரை, கரூர் மாநகராட்சி மேயர் வெ.கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்து சமய அறநிலைத் துறை புது பொலிவுடன் வீறு நடை போடுகிறது. முதலமைச்சர் தளபதி அவர்களின் உத்தரவுகளும் உற்சாகமும் தான் முக்கிய காரணமாகும். அந்த வகையில் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பொக்கிஷமான திருக்கோயில்களை பாதுகாக்க வேண்டும் என்ற உன்னத காரணத்திற்காக முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களுக்கு திருபணிகள் நடத்துவதற்காக கடந்த இரண்டு நிதி யாண்டுகளில் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடி அரசு மானியமாக வழங்கினார். வரலாற்றில் ராஜராஜ சோழன் காலத்தில் தான் திருக்கோயில்களின் பணிகள் உயர்வு பெற்றது என்று சொல்வார்கள். அதே போல் ராஜராஜ சோழனுக்குப் பிறகு இந்த ஆட்சியில் தான் சிதிலமடைந்த திருக்கோயில்கள் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பக்தர்களின் தரிசனத்திற்கு திரும்ப கொண்டு வருகின்ற ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இன்று அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ஒட்டு மொத்தமாக ரூ. 5 கோடி மதிப்பில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மூலவர் சன்னதி, அர்த்த மண்டபம் மற்றும் மகாமண்டபம் புனரமைத்தல் அதில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அம்பாள் சன்னதி புனரமைத்தல், பணிகளும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் சோபன மண்டபம் மீள கட்டும் பணி, ரூ.8

இலட்சம் மதிப்பீட்டில் மடப்பள்ளி புரனமைத்தல், ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் உப சன்னதிகள் வர்ணம் பூசும் பணி, ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் தெற்கு திருமதில் கட்டும் பணி, ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு வடக்கு கிழக்கு திருமதில் புனரமைத்தல் பணி, ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் ராஜகோபுரம் கல்காரம் புணரமைத்தல் பணி, ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் மீள கட்டுதல் பணி, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் யாகசாலை (அபிசேக மண்டபம் ) மீள கட்டுதல் பணி, ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சுப்பிரமணியர் சன்னதி கட்டுதல் பணி போன்ற 11 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்தத் திருக்கோயிலுக்கு எப்போது குடமுழுக்கு நடைபெற்றது என்ற குறிப்பு இல்லாமல் இருக்கிறது. ஆனால் மணிமுத்தீஸ்வார் சன்னதிக்கு 2002 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடந்ததற்கான கல்வெட்டு உள்ளது. மூலவரான அகஸ்தீஸ்வரருக்கு எப்பொழுது குடமுழுக்கு நடந்தது என்ற குறிப்புகள் இல்லை. இது போன்ற குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களை ஒவ்வொன்றாக கணக்கில் எடுத்துபுனரமைக்கப்பட்டு வருகிறது. 400 ஆண்டுகள் பழமையான திருவெற்றார் ஆதி கேசவ பெருமாளுக்கு கூட இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நான் குடமுழுக்கு நடைபெற்று இருக்கிறது. நேற்றைக்கு கூட சென்னை மாமல்லபுரத்தில் தலசயன பெருமாள் கோயில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. ஆண்டுக்கணக்கில் குடமுழுக்கு நடைபெறாத திருக்கோவில்களுக்கு எல்லாம் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் குடமுழுக்கு நடைபெற்று வருகிறது. இதுவரை 1339 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. நேற்று மட்டும் 13 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்ற உள்ளது. அனைவரும் ஒருங்கிணைந்து திருப்பணிகளை விரைவுபடுத்தினால் வருகின்ற 2026 ஆண்டு ஜனவரி மாதம் இத்திருக் கோயிலின் குடமுழுக்கு நடைபெறும் என்றார்.

இந்நிகழ்வில் துணைமேயர் ப. சரவணன், உதவி ஆணையர்/செயல் அலுவலர் நா.நந்தகுமார், தக்கார்/உதவி ஆணையர் பி. ஜெயதேவி, மாவட்ட அறங்காவர்

நியமனக்குழு தலைவர் கு.பால்ராஜ், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள்

உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### குன்னூர் நகராட்சித் தலைவர் - கழகப் பொதுக்குழு உறுப்பினர்

# எல்.ஷீலா கேத்ரின் மறைவு!

### முதல்வர் - மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 5 -

குன்னூர் நகராட்சி தலைவரும், தலைமைக் கழக பொதுக் குழு உறுப்பினருமான திருமதி.எல்.ஷீலாகேத்ரின் (68) அவர்கள் 2.2.2024 வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணியளவில் மாரடைப்பால் குன்னூரில் இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் இரண்டு முறை தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும், இரண்டு முறை குன்னூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கழகத்தின் மீது மிகுந்த பாசம் கொண்டவராக கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். இவர், சிறுபான்மை மக்கள் மத்தியில் மிகுந்த அன்பு கொண்டவராக கழக பணியாற்றி வந்தார்.

இவரது கணவர் ஏற்கனவே காலமாகிவிட்டார். இவருக்கு திருமணமான ஜோஸ்வா ஜான்சன் என்கிற மகனும், ஈவா ஜென் என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

### பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பரப்புரைப் பயணம்!

### பிப்.12 முதல் 24ந் தேதி வரை நடைபெறுகிறது!

சென்னை, பிப். 5 -

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், அனைத்துத் தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் தலைமையில் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாப் பரப்புரையுடன் 32-ஆம் ஆண்டு ஊர்திப் பயணம் (இரத யாத்திரை) கன்னியாகுமரி முதல் சென்னை வரை 12.02.2024ந் தேதி தொடங்கி 24.02.2024 வரை நடைபெறுகிறது.

12.2.1993-ஆம் நாள் கன்னியாகுமரி சென்னை 50 நாட்கள் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை வேண்டும். பயணம் 50 நாட்கள் நடந்தோம். தொடர்ந்து கடந்த 31 ஆண்டுகளாக நாம் நடத்தி வந்த 'தமிழ் நாட்டில் தமிழுக்கு முதன்மைப் பயணமும்,' கன்னியாகுமரி இமயம் - தில்லி தமிழ்ப் பரப்புரை தமிழர் உரிமைப் பாதுகாப்புப் பயணமும் கண்ணகி சிலையை மீண்டும் வைத்திடக் கண்ணகி சுடர்ப் பயணம் தமிழ்ச் சுடர் ஏந்தி ஒட்டப் பயணம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்ற வேண்டுதல் பயணம் நிறைவடைந்த நிலையில், நம் தமிழ்ப் பயணம் இந்த ஆண்டும் தொடர்கிறது.

இந்த ஆண்டு, கலைஞர்; தமிழ்நாட்டிற்கு செய்த தொண்டறத்தை மக்கட்கு எடுத்துக் கூறிப்போற்றுதலோடு 32-ஆம் ஆண்டு தொடங்கும் இத்தமிழ்ப் பயணம்அடியில்குறிப்பிட்டவாறு தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிற்றூர், பேரூர்களில் வழித் தடத்தில் மக்களைச் சந்தித்து நம் தாய்த் தமிழ் மொழியை நம் தமிழ்நாட்டில் முதன்மைப்படுத்தும் கொள்கைகளை வலியுறுத்தும் தமிழூர்திப் பயணத்தை மேற்கொள்ள உள்ளோம். இவ்வாண்டுத் தொடர் பயணமும் எப்போதும் போல் நடைபெறுகிறது. நன்மக்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

**32 – ஆம் ஆண்டு நிகழ்வுப் பயணம்**

12.2.2024 - கன்னியாகுமரி காலை 9 மணி - வள்ளியூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, - தூத்துக்குடி தங்குதல்.

13.2.2024 - தூத்துக்குடி - எட்டயபுரம், கோயில் பட்டி, கழுகுமலை, சங்கரன்கோயில், முறம்பு பாவாணர் கோட்டம், இராச பாளையம் - இராச பாளையம் தங்குதல்.

14.2.2024 - இராசபாளையம் - திருவல்லிபுத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, மதுரை - மதுரை தங்குதல்.

15.2.2024 - மதுரை - திருப்பத்தூர், திண்டுக்கல், கரூர் - கரூர் தங்குதல்.

16.2.2024 - கரூர் - ஈரோடு 100 கவிஞர்கள் கலைஞர் நூற்றாண்டு விழா - கரூர் தங்குதல்.

மேற்கண்டவாறு பரப்புரை பயணம் நடைபெறுகிறது.



நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நிறுவப்பட்டுள்ள அண்ணா சிலைக்கு ,அறிஞர் அண்ணாவின் 55வது நினைவு தினத்தை ஒட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது. அப்போது எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறபாடுபட வேண்டும் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.இந்த நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ் குமார், நகரச் செயலாளர் ஜார்ஜ், மாவட்ட பொருளாளர் நாசர் உட்பட திமுகவினர் பங்கேற்று அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தினர்.





பெருநகர சென்னை மாநகராட்சி
நகராட்சி நிருவாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
புதிய திட்டப்பணிகளுக்கு
அடிக்கல் நாட்டு விழா
மற்றும்
முடிவுற்ற திட்டப் பணிகள்
திறப்பு விழா
நாள் : 05.02.2024 காலை 9 மணி
இடம் : ரிப்பன் கட்டட வளாகம்.
விழாப் பேருரையாற்ற வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
பெருநகர சென்னை மாநகராட்சி
GREATER CHENNAI CORPORATION
ARASU ARTS
அன்புடன் : கே.என்.நேரு
நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்

# திராவிட மாடல் அரசு 54

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**




## ஆனைக்கும் அன்னையாகும் அரசு!

யானை, ரயில், கடல்... இந்த மூன்றும் பார்க்கப் பார்க்கத் திகட்டாத அனுபவம் என்பார்கள். திரைப்படங்களிலும், கோயில்களில் சிற்பங்களாகவும், காட்டுயிர் காப்பகங்களிலும் காணும்போது அறிவுமிக்க உயிரினமாக மனிதர்களுக்குத் தென்படும் யானை, மனிதக் குடியிருப்புகளில் தென்படும்போது அவற்றின் மீது மனிதர்களால் ஏவப்படும் வன்முறைக்கு அளவே இல்லை.

இந்த பூமி அனைவருக்கும் பொதுவானது. ஆனால், மனிதர்கள் அதைத் தங்களுக்கானதாக மட்டுமே உரிமை கொண்டாடுகிறார்கள். அதனால்தான் யானை உள்ளிட்ட காட்டுயிர்கள் வாழும் இடத்திலும் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறார்கள்.

இந்தியா போன்ற நாட்டில் யானைகள் என்பவை வெறுமனே காட்டுயிர்களாக மட்டுமல்லாமல், கடவுளாக நினைத்து வணங்கும் கலாசாரமும் உண்டு. ஆனால், அவை சரியான முறையில் பாதுகாக்கப்படுகின்றனவா என்றால், அது மிகப் பெரிய கேள்விதான். அந்தக் கேள்விகளுக்கு விடை சொல்லும்விதமாக ‘திராவிட மாடல் அரசு’ மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

### ஆசிய யானை நம் பெருமை!

உலகில், ஆசிய யானைகள், ஆப்பிரிக்க யானைகள் என இரண்டு வகையான யானைக் கூட்டங்கள் தென்படுகின்றன. ஆப்பிரிக்க யானைகள் ஆப்பிரிக்க கண்டத்தில் மட்டுமே தென்படுகின்றன. ஆசிய யானைகள் இந்தியா, இலங்கை, நேபாளம், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இருக்கின்றன. இவற்றில் இந்தியாவில்தான் அதிக எண்ணிக்கையிலான யானைகள் உள்ளன. இங்கு சுமார் 30 ஆயிரம் யானைகள் இருக்கின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாடு, கேரளம் மற்றும் கர்நாடகப் பகுதிகளில்தான் யானைகள் அதிக அளவில் உள்ளன. அதிலும் தமிழ்நாட்டுக்கு உள்ள பெருமை என்னவென்றால், இங்கு குட்டி முதற்கொண்டு முதிய யானை வரை, அனைத்து வயதைச் சேர்ந்த யானைக் கூட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் பரவலாகத் தென்படுகின்றன. தவிர, ஆரோக்கியமான கூட்டமாகவும் அவை உள்ளன. தமிழ்நாட்டில் 2,960 யானைகள் இருக்கின்றன. யானைகளின் எண்ணிக்கை தொடர்பான கணக்கெடுப்பு,



கடைசியாக 2017 இல் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. அப்போதிலிருந்து 2023 ஆகஸ்ட் வரை, சுமார் 200 யானைகள் தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளன. ஒரு பகுதியில் யானைகள் எண்ணிக்கை பெருகுகின்றன என்றால், அங்கே சுற்றுச்சூழல் சிறப்பாக உள்ளது என்று பொருள்.

### ஆதார உயிரினம் காப்போம்

யானைகள்தான் ஒரு காட்டின் ஆதார உயிரினம். ஏனென்றால், இதர காட்டுயிர்கள் யானையைச் சார்ந்தே வாழ்வதால்தான். அது எப்படி? நிலத்தில் உள்ள உயிரினங்களில் அளவில் பெரியது யானை. ஆகவே அதற்கான உணவும் பெருமளவில் தேவைப்படும். அவ்வளவு உணவு ஒரே இடத்தில் கிடைக்காது. எனவே, அது ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு நகர்ந்து கொண்டே இருக்கும். இவ்வாறு பயணிக்கும்போது, யானையின் கால்கள், தும்பிக்கை ஆகியவற்றின் மூலம் விதைப் பரவல் நடக்கும். அதன் காரணமாக, அங்குத் தாவரப் பெருக்கம் நிகழும். அந்தத் தாவரங்களைத் தேடி வேறு பல உயிரினங்கள் அங்கு வரும்போது, அந்தப்







பகுதியில் உயிரிப் பன்மையம் அதிகரிக்கும்.

யானைகள் இல்லையென்றால், காடுகள் வறட்சியடையும். அதனால் சூழல் சீர்கெடும். எனவேதான் யானைப் பாதுகாப்பு முக்கியத்துவம் தரப்படுகிறது. தந்தங்களுக்காக வேட்டையாடப்படுதல், யானைகளின் வழித்தடங்கள் மனிதர்களால் ஆக்கிரமிக்கப்படுதல், ரயில்களால் விபத்துக்கு உள்ளாதல், அந்நியச் செடி பரவலால் உணவு வளம் குறைதல், மாறி வரும் பருவ நிலையால் காட்டில் உணவு குறைந்து வயல்வெளிகள் உள்ளிட்ட மனிதக் குடியிருப்புகளுக்குள் வருதல், அவ்வாறு வரும்போது அவை மனிதர்களால் தீமைகளுக்கு உள்ளாகி, அதன் காரணமாக மனிதவிலங்கு எதிர்கொள்ளல் ஏற்படுதல் என காட்டில் வாழும் யானைகள் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றன.

### ஆபத்துகளைத் தடுக்கும் அரண்

மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, ஒன்றிய அரசு ‘புராஜெக்ட் எலிஃபன்ட்’ எனும் திட்டத்தை 1992 முதல் செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் யானைகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் ஓரளவு குறைந்துள்ளனவே தவிர, முற்றிலுமாக நீங்கிவிடவில்லை. இந்தப் பின்னணி யில்தான் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, 2021 முதல் செயல்படுத்தி வரும் திட்டங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றன.

நம் கழக அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், ஆகஸ்ட் மாதம் நீலகிரி மசினக்குடி பகுதியில், காயங்களுடன் ஊருக்குள் சுற்றித் திரிந்த ‘ரிவால்டோ’ என்ற யானையைப் பிடித்து, அதற்குச் சிகிச்சையளித்து, மீண்டும் வனத்துக்குள் விடப்பட்டது. இவ்வாறு பிடிபட்ட காட்டு யானையை, சிகிச்சைக்குப் பிறகு மீண்டும் காட்டில் விட்டது அதுவே முதன்முறையாக இருந்தது. அதற்கு முன்பு வரை, பிடிபட்ட யானைகள் எல்லாம் காப்பகங்களில் வைக்கப்பட்டிருக்கும். நமது அரசின் இந்த நடவடிக்கை சூழலி யலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

தொடர்ந்து, 13 யானைப் பாகன்கள் மற்றும் உதவியாளர்களைத் தாய்லாந்து நாட்டுக்கு அனுப்பிப் பயிற்சி பெற வைத்தது, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை உள்ளடக்கி புதிதாக ‘அகஸ்தியமலை யானைகள் காப்பகம்’ அறிவித்தது, முதன்முறையாக தமிழ்நாட்டில் அந்நிய களைச் செடிகள் அகற்றுதல் குறித்த கொள்கையை உருவாக்கியது, மாவட்டம் வாரியாக அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து அந்நிய களைச்செடிகளை அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது, தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்திய அரசு மற்றும் முன்னணி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 2023-ஆகஸ்ட் மாதம் யானைகள் குறித்த மாநாட்டை நடத்தியது ’வைல்ட்லைஃப் டிரஸ்ட் ஆஃப் இந்தியா’ போன்ற அமைப்புகளுடன் இணைந்து பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துவது என யானைகள் பாதுகாப்புக்காகப் பாடுபட்டு வருகிறது நம் அரசு.

யானைகளுக்கு என்று ஒரு மொழி உண்டு. அது அன்பின் மொழி. அதைச் சரியாகக் கையாளத் தெரிந்த அன்னையாக விளங்குகிறது ‘திராவிட மாடல் அரசு’..!

...சாதனை தொடரும்

### யானைகளுக்காகச் சில ஆணைகள்!

- 2024 ஜனவரி 15 வரை, ரூபாய் 25.56 கோடி செலவில் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலான அந்நிய களைச் செடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் வன உயிரினங்களின் வாழிடத்தின் வளம் மேம்பட்டு, தீவனம் அதிக அளவில் வனத்துக்குள்ளேயே கிடைப்பதற்குரிய சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது.
- 2022-இல், யானை இறப்பு குறித்த தணிக்கைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் யானைகள் இறப்பு குறித்துக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்படி ஒரு கட்டமைப்பு, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- கோவை மாவட்டம், மதுக்கரை, ரயில் தண்டவாளத்தில் யானைகள் இறப்பதைத் தடுக்க செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தொழில்நுட்பக் கட்டமைப்பு ரூபாய் 4 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, முன்னோட்ட நடவடிக்கையில் உள்ளது.
- நீலகிரி மாவட்டம், தெப்பக்காட்டில் புதிய யானைகள் பாதுகாப்பு மையம் மற்றும் சுற்றுச்சூழல் வளாகம் அமைத்திட அறிவிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கோழிகமுத்தியில் அமைந்துள்ள முகாமை ரூபாய் 5 கோடி செலவில் மேம்படுத்தவும், சாடிவயலில் ரூபாய் 8 கோடி செலவில் புதிய யானைகள் முகாம் அமைத்திடவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 2023-இல், ‘தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்’; ஆவணப்படம் ஆஸ்கர் விருது பெற்றதைத் தொடர்ந்து, தெப்பக்காடு யானைகள் முகாமில் முதல் பெண் காவடியாக (யானை பராமரிப்பாளர்) வி.பெள்ளி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், கோவை மாவட்டம், ஆனைமலை மற்றும் நீலகிரி மாவட்டம், முதுமலை ஆகிய இடங்களில் உள்ள யானைக் காப்பகங்களில் பணியாற்றும் யானைப் பாகன்களுக்கு ரூபாய் 9 கோடியில் வீடுகள் கட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2022-இல் ஆனைமலை யானைக் காப்பகப் பணியாளர்களுக்கு, அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றியதற்காக ஒன்றிய அரசின் முதலாவது ‘கஜ் கவுரவ்’ விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தனிப் பாதையில் தமிழ்நாடு!

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, ‘கழகங்கள் இல்லாத ஆட்சியமைப்போம்’ என்று கூச்சலிட்ட வர்கள்கூட, இப்போது வட மாநிலங்களில் ‘கழக’ மாடலை பின்பற்றித்தான் தேர்தல் அறிக்கை தயாரிக்கிறார்கள். கழகத்தின் ‘திராவிட மாடல்’ இந்தியாவுக்கே வெளிச்சம் காட்டும் ‘வெற்றி மாடல்’ என்பதை இன்னும் முழுமையாக உணர்வதற்கான வாய்ப்பை, அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ‘நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிகை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஐபோன்களில் நான்கில் 3 பங்கு தமிழ்நாட்டில் இருந்து உற்பத்தி செய்யப்படுவதை முன்வைத்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மிக அழகாக விளக்கியிருக்கிறது அந்தப் பத்திரிகை.

“ஒட்டுமொத்த இந்தியாவும் ஒரு திசையில் ஓடினால், தமிழ்நாடு மட்டும் அதில் இருந்து வேறுபட்டு, வேறு பாதையில் பயணிக்கிறது. சென்னை, கோவை, திருப்பூர், சிவகாசி போன்ற தமிழ்நாட்டின் சில பகுதிகள் ஏற்கெனவே தொழில்துறையில் சாம்பியனாக உள்ளன. இந்திய மக்கள்தொகையில் 5 சதவிகிதத்தினர் மட்டுமே வாழும் தமிழ்நாட்டில்தான், இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 43 சதவிகிதத்தினர் இருக்கிறார்கள்” என்று பாராட்டியிருக்கிறது.

தொழில்துறை, தொழில்நுட்ப வளர்ச்சியில் தி.மு.க அரசு முன்னெடுத்து வரும் பணிகளையும் சுட்டிக்காட்டி, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அகில உலகும் அறிய வைத்திருக்கிறது‘நியூயார்க் டைம்ஸ்’. ஒன்றிய அரசின் ‘மேக் இன் இந்தியா’ திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் கூட தாக்கம் செலுத்தவில்லை என்றும் அந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

### ஃப்ளாஷ்பேக்



#### இராமராசபுரத்தில் அண்ணாவும் தம்பியும்!

1960 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் நாளன்று மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அமைந்துள்ள இராமராசபுரம் கிளைக் கழகத் திறப்பு விழாவுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்தார்கள். அப்போது, என்னுடைய தாய் மற்றும் தந்தை ஆகியோருடைய தந்தையர் இருவரும் (சுப்பிரமணியன், பழனிச்சாமி) அண்ணாவை வரவேற்று, அவர் அருகில் அமர்ந்து உரையாடினர். அப்போது மதுரை, மேயர் எஸ்.முத்து அவர்களும் உடனிருந்தார். சுமார் 24 ஆண்டுகளுக்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று, இராமராசபுரம் கிளைக் கழகத்துக்கு வருகை தந்து கொடியேற்றிச் சிறப்பித்தார்.



ராகுல்

**-ப.ராகுல், மேலூர், மதுரை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### முத்திரை பதித்த ஓவியக் கண்காட்சி!

**1952-ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல், தி.மு.க.வின் எதிர்காலத் திட்டங்கள் - செயல்முறைகள்- தேர்தல் குறித்து ஆலோசிக்க, மதுரையில் பொதுக் குழு கூடியது. நவம்பர் 17 அன்று காலையில் தொடங்கிய பொதுக்குழு, மறுநாள் காலை வரை இடைவேளை இல்லாமல் நீண்டது. பொதுக்குழுத் தீர்மானத்தின்படி, டிசம்பரில் சென்னையில் ‘முதல் மாநில மாநாடு’ நடைபெற்றது. அந்த மாநாட்டில் தமிழ்நாட்டின் வளத்தைக் காட்டக்கூடிய ஓவியக் கண்காட்சி இடம்பெற்று, வரலாற்றில் முத்திரை பதித்தது.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 379




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131